23 MAR 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்




# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 10 வியாழக்கிழமை ( 23 - 03 - 2000 ) VALAMPURI ஒலி: 95


★ இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில்

# அரசும் - புலிகளும் விரும்பினால்

# பிரிட்டன் மத்தியஸ்தம் வகிக்கும்!

## தமிழ்க்கட்சிகளிடம் பிரி. தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இனப்பிரச்சினை தொடர்பான சமரச முயற்சிக்கு இணக்கம் தெரிவிக்குமானால் மூன்றாம் தர மத்தியஸ்தத்திற்கு பிரிட்டிஷ் அரசு தயாராக உள்ளது.

எனினும் நோர்வே அரசாங்கமும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கி வரலாம்;

இவ்வாறு இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா ஜோய் டபீல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டா ஜோய் டபீல்ட் நேற்றுக்காலை நடைபெற்ற அரசியல்க் கட்சிகளுடனான சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் 512வது பிரிவின் படைத் தலைமையகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது வலி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளவும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தி புனர்

[8 ஆம்பக்கம் பார்க்க]

## இளஞ் சந்ததி அழிவதைத் தடுக்க பௌத்தபீடம் முன் வரவேண்டும்

### இந்துப் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத் தீர்வுக்கான முன்னெடுப்புக்களை அரசாங்கமும் எதிர்க்கட்சியும் மேற்கொள்ளும் வகையில் அவற்றுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவை அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்கதேரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் உயிரிழப்பு

மட்டக்களப்பு திருமலை மாவட்டங்களில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் 4பேர் உயிரிழந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு.

லெப்ரினன்களான

★ அருள் மணி

(8ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் குற்றச் செயல் அதிகரிக்க தப்பியோடிய படையினரே காரணம்

### பத்திரிகையாளர் மாநாட்டில் பீரிஸ்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களாலேயே நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக நீதி அரசியல் அமைப்பு இனவிவகார] தேசிய நல்லிணக்க அமைச்சரும் பிரதிநிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சில் நேற்று அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அம்மாநாட்டில் அமைச்சர்மேலும் தெரிவித்திருப்பதாவது முப்படைகளில் இருந்து தப்பி ஓடியவர்களே நாட்டில் குற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் தூதுவருடனான சந்திப்பு

# ஈ.பி.டி.பி. கட்சியை அழைக்கவில்லை

# ஜெகன் எம்.பி கடும் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டா ஜோய் டபீல்ட் நேற்று 512வது டைப் பிரிவின் அலுவலகத்தில் வைத்து தமிழ் அரசியல் கட்சிகளைச் சந்தித்துப் பேசினார்,

இச்சந்திப்புத் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு முன்கூட்டிய அழைப்பு எதனையும் ஏற்பாட்டாளர்கள் வழங்கவில்லையென யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ, பி. டி. பியின் யாழ்மாவட்டப் பிரதம அமைப்பாளருமான கே, வி. குகேந்திரன் (வி. கே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலில் பயணம் செய்த தமிழ் மாணவன் காடையரால் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து பம்பலப்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதத்தில் பிரயாணம் செய்த தமிழ் மாணவர் ஒருவர் பெரும்பான்மை இன மக்களினால் கொள்ளுப்பிட்டியில் வைத்து பலத்த தாக்குதலுக்கு ஆளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்

(8ஆம் பக்கம் பார்க்க)

இராஜகிரிய குண்டுத் தாக்குதல்

## வவுனியா தபாலக ஊழியர் நால்வர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது

(வவுனியா)

வவுனியா பிரதம தபாலகத்தில் கடமைபுரியும் இரு தபாலதிபர்கள் உட்பட 4 உத்தியோகத்தர்கள் கொழும்பிலிருந்து வந்த விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி இராஜ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையின் இன்றைய நிலைக்கு செய்தி ஊடகங்களே காரணம்

### பிரதி அமைச்சர் டிலான்பெரேரா

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு இங்கு வெளிவரும் ஊடகங்களும் ஒருகாரணமாக அமைவதுடன் இனப்பிரச்சினையைப் பெரிது படுத்தியுமுள்ளன.

இவ்வாறு நீதி அரசியல் அமைப்பு இனவிவகார பிரதி

(8ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

## 27 ஆம் திகதி முதல் உறவினர்கள் உள்ளே செல்ல அனுமதி இல்லை

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பயணிகளை அனுப்புவதற்குச் செல்லும் உறவினர்கள் நண்பர்கள் 27 ஆம் திகதி முதல் விமான நிலையத்தின் வெளிவாசல் வரையே செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

விமான நிலையத்துக்குள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேரணிக்கு சகலரும் திரண்டு வாரீர்!

(யாழ்ப்பாணம்)

25 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சமாதானப் பேரணிக்கு குடாநாட்டு மக்கள் அனைவரும் ஆதரவு நல்க வேண்டும்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## துணைவேந்தர் உடனடி நடவடிக்கை பேராசிரியர் 'சூரியா' மீண்டும் பதவியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூத்த பேராசிரியரும் மகப்பேற்றியல்த் துறை நிபுணருமான எம் சிவசூரியா தனது பல்கலைக்கழகப் பதவிகளை நேற்று மீண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### பலம்மிக்க யந்திரங்கள்

ஆலயங்களுக்கும், இல்லங்களுக்கும், வியாபாரஸ்தாபனங்களுக்கும் பலம்மிக்க லக்ஷ்மி கடாச்ச யந்திரங்கள் மற்றும் தோஷ, கடன் தொல்லை, பயம், தடைகள் வெளிநாடு செல்வோர்க்கும் பாதுகாப்பு ஆகிய பலவற்றிற்கும் அவர் நட்ஷத்திரம், பெயர், ஊர்அல்லது கிராமம் இவைகளை கணித்து மந்திராலய மகானின் அருள் ஆசியுடன்தரப்படும் வேண்டுபவர்கள் ஸ்ரீராகவேந்திர ம்ருத்திக்கா 159A, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

# நோர்வேயுடனான பேச்சு;சிலவற்றில் இரகசியம் காக்க வேண்டியுள்ளது

## பதில் வெளிவிவகார மந்திரி கூறுகிறார்

(கொழும்பு)

''ஸ்ரீலங்கா அரசுக்கும் நோர்வே அரசுக்கும் இடையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. 1987 ஆம் ஆண்டுநடைபெற்றது போல் இரகசியமாக எதுவும் நடைபெறவில்லை. ஆனாலும் சில விடயங்களை இரகசியமாகப் பேண வேண்டியுள்ளது. அப்படியானால் தான் இப் பேச்சுவார்த்தைகளை நாம் வெற்றிகரமாக மேற்கொண்டு ஒரு இலக்கை அடைய முடியும். முரண்பாடுகளைக் களைய முடியும்.

இவ்வாறு பதில் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

''அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் இலங்கைக்கு விஜயம் செய்யாதற்குக் காரணம் எமக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் முரண்பாடுகள் எதுவும் இல்லாததேயாகும்'' என்றும் அவர் கூறியிருக்கிறார். (சி)

## ஒரு வாரகாலம் வீட்டிலுறைந்த நாகபாம்பு

(சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கு புத்தூர் வீதியில் உள்ள வீடொன்றில் நாகபாம்புக்குட்டி ஒன்று ஒரு வாரகாலமாக வீட்டிலேயே தங்கி இறை தரிசனம் கொடுத்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த மாதம் திருமதி க. கணேசலிங்கம் என்பவருடைய வீட்டில் இடம் பெற்றுள்ளது.

(செ-21)

# இலங்கைக் கப்பல் இந்திய கடற்பரப்பிலிருந்து மர்மமறைவு

(கொழும்பு)

இந்தியாவின் கேரளமாநிலத்தில் திருவனந்தபுரம் கடற்பரப்பிலிருந்து டுபாய் நோக்கிப் புறப்பட்டுச்சென்ற இலங்கைக்கப்பல் ஒன்று காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கப்பலைக் கண்டுபிடிக்கும் தீவிரமுயற்சியில் இருநாட்டுக் கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

தேவையான ஆவணங்கள் ஏதுமற்ற நிலையில், இக்கப்பலின் கப்டனும் இருமாலுமிகளும் கடந்தமாதம் 14 ஆம் திகதி திருவனந்தபுரத்தின் கடற்பரப்பில் பொருட்களைக் கொள்வனவு செய்ய தரித்துநின்றபோது இந்தியக் கடற்படையினராலும் கடலோரக் காவற்படையினராலும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அதன்பின் இக்கப்பல் காணாமல்போய்விட்டதாகக் கேரள மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (சி)

## கொழும்பில் கம்பன் விழாவிற்கான ஏற்பாடுகள் துரித கதியில்

(கொழும்பு)

இவ்வாண்டும் கம்பன் விழாவை தலை நகரில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் 20தொடக்கம் 23 வரை நடைபெறஇருக்கும் விழாவில் உள்நாட்டுஅறிஞர்களும், கலைஞர்களும் தமிழ் நாட்டு அறிஞர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விழாவில் கலைஞர்கள் பலர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (து)

## நோர்வே உதவியுடன் தீர்வு கண்டால் உலகத் தலைவர்கள் இங்கு வருவர்

### இ. தொ. கா. எம். பி சொல்கிறார்

(கொழும்பு)

''நோர்வே மத்தியஸ்தத்துடன் வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு கண்டுவிட்டால் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் மட்டுமல்ல உலக நாடுகளின் தலைவர்களும் இலங்கைக்கு வருகைதருவார்கள்.,,

இவ்வாறு நுவரெலியா மாவட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எம்.பி. எஸ் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

''இலங்கைத் தேயிலை உலக அளவில் எமது நாட்டைப் பிரபலப்படுத்தியுள்ளது. எனினும் தேயிலை உற்பத்தியிருந்தும் இந்திய வம்சாவளிக தமிழர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப் படுகிறார்கள்,, என்றும் அவர் கூறியுள்ளார். (சி)

## புற்றுநோய்க்கு அருமருந்தாகும் தக்காளி

(எச்சமோட்டை)

நமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் தக்காளிப் பழத்தில் புற்றுநோயை குணப்படுத்தும் சக்தி நிரம்ப உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தக்காளிப்பழத்தின் சிவப்பு நிறத்திற்கு காரணமான தாதுப்பொருள் உடலினுள் சென்று குறிப்பாக மார்பு புற்றுநோய் கட்டிகளை கரைக்கும் தன்மை கொண்டது தெரிவிக்கப்படுகிறது.

(க-59)

## சான்றிதழ் வழங்கல்

(கோப்பாய்)

யாழ். கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின, 1999 ஆம் ஆண்டிற்கான தொழிற்திறன் பயிற்சியை மேற்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை' நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதென, முறைசாராக் கல்விச் செயற்திட்ட அலுவலர் சி. சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

(செ-79)

## இன்று விளையாட்டுப் போட்டி

(அச்சுவேலி)

வலிகிழக்குப்பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2000 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வலிகிழக்கு அமைப்பாளர்யு.எல்.ரவி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க-14)

## ஆணின் சடலம் கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேத்தாத்தீவு கடற்கரையோரம் கடந்த திங்கட்கிழமை 52 வயது மதிக்கத்தக்க இன்ந்தெரியாத ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சடலமானது களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலைக்கு மரணவிசாரணை அதிகாரி ச. பேரின்பநாயகம் மரண விசாரணையை நடத்தி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார்,

இந்தசடலத்தை யாரும் உரிமை கோராததால்களுவாஞ்சிக்குடிபொது மயானத்தில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (க-60)

## சிறுதானிய செய்கை

(வரணி)

வரணி இயற்றாலை பகுதிகளில் நெல் அறுவடையின் பின்னர் சிறு தானியச் செய்கை மேற் கொள்வதற்கான நடவடிக்கைஅப்பகுதிவிவசாயிகளால் விவசாய சம்மேளனத்தின் உதவியுடன் மேற் கொள்ளப்படுகிறது. [க-28]

# சக்திமிகு படகுகளை பயன்படுத்த மீனவர்க்கு அனுமதி வேண்டும்

## புலிகளின்படகுகள்பற்றியும்ஜயலத்எம். பி. பிரஸ்தாபம்

(கொழும்பு)

''விடுதலைப் புலிகள் சாதாரணப் படகுகளைப் பயன்படுத்துவதில்லை 150 வோல்ட் சக்தி வாய்ந்த இயந்திரப் படகுகளை அவர்கள் தமது தாக்குதல்களுக்குப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில் மீனவர்களின் படகுகள் அவர்களுக்குத்தேவைப் படமாட்டாது.

இவ்வாறு ஐ. தே. க. எம். பி. டாக்டர் ஜயலத் ஜயவர்தன கூறியுள்ளார்.

''மீனவர்கள் 25 குதிரைச் சக்தி வாய்ந்த இயந்திரப்படகுகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும். கடலில் வெகுதூரம் சென்று மீன்களைப் பிடிக்கக் கூடியதான சக்தி வாய்ந்த படகுகளை வழங்கவும். சாதாரணப் படகுகளை வழங்குவதில் எவ்வித பயனுமில்லை. குறைந்த பட்சம் 50 வோல்ட் சக்தி வாய்ந்த இயந்திரப் படகுளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் படவேண்டும்.'' என்றும் அவர் தெரிவிந்துள்ளார்.

((சி)

## கொழும்பு நகரிலும் புலிகளின் தொலைத்தொடர்புநிலையம்இயங்குகிறதா?

(கொழும்பு)

கொழும்பு இராஜகிரிய தாக்குதலில் உயிரிழந்த புலிகளிடமிருந்து 'ஐகொம்'றேடியோக் கருவிகள் கைப்பற்றப் பட்டதையடுத்து கொழும்பு நகரில் புலிகள் சக்திமிக்க தொலைத்தொடர்பு அமைப்பொன்றை இயக்கி வருவதாகப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து வோக்கிடோக்கிகளும் கைப்பற்றப் பட்டுள்ளதாம் மேற்கண்ட கருத்தை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

இதேவேளையில் இராஜகிரிய குண்டு வெடிப்பு நிகழ்ந்த வேளையில் பாராளுமன்றத்திலிருந்து முக்கிய அரசியல் வாதிகள் புறப்படும் நேரம் போன்ற முக்கிய தகவல்கள் இராஜகிரிய பகுதியில் நிலைகொண்டதாகக் கருதப்படும் விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்கப்பட்டமையானது பாராளுமன்றப் பகுதியிலும் விடுதலைப்புலிகளின்நடமாட்டம் இருந்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தைத்தோற்றுவிக்கிறது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(க-9)

## விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

(அரியாலை)

யாழ். புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை முறைசாராப் பிரிவினரால் நடாத்தப்படவிருக்கும் கணனிக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாகத்தயாரிக்கப்பட்ட இரு விண்ணப்பப்படிவங்களை 31-03-2000 இற்கு முன்பதாக அனுப்பி வைக்கும் படி அதிபர் கேட்டுள்ளார். (க-106)



## தவக்கால சிந்தனை

### 16 ஆம் நாள்

லூக் 16: 25 வசனம் வாயிலாக ஆபிரகாம் செல்வந்தரை நோக்கிக் கூறியது. மகனே வாழ்நாளில் உனக்கு இன்ப சுகமே கிடைத்தது. இலாசருக்கு துன்ப துயரமே கிடைத்தது. இதை நினைத்துக் கொள். ஆனால் இப்பொழுது அவன் இங்கே ஆறுதல் பெறுகிறான் நீயோ மிகுந்த வேதனைப் படுகிறாய்.

இன்பம் அனுபவிப்பவன் என்றோ ஒரு நாள் துன்பத்தையும் எதிர் கொள்ளத்தான் வேண்டும். என எண்ணிக்கொள். இவ்வுலகில் செல்வந்தனுக்கு அடிமையாகி மகிழ்வுறாது விண்ணுலக செல்வத்தைப் பற்றிக் கொள்ள முயற்ச்சிசெய் ஏனெனில் நிலையில்லாத ஒன்றுக்கு அடிமையாவதில் பயன் என்ன?

செல்வந்தர்தான் வாழும் காலத்தில் இன்பத்தில் மிதந்தான். இலாசரோ துன்ப துயரமே அடைந்தான். இன்று இறைவன் சன்னிதானம் இலாசர் இன்பத்தை அனுபவிக்க செல்வந்தர் துன்பத்தை எதிர் கொண்டான். நாம் மற்றவர் துன்பங்களைக் கண்டு விலகி ஓடாது அவர்கள் துன்பத்திற்கு உதவும் கரமாக மாறுவோம் ஏனெனில் நாம் மற்றவர்களுக்கு எந்த அளவையால் அளக்கிறோமோ அதே அளவையால் இறைவன் எம்மையும் அளப்பார்.

ஆர். ஜெயா
நாவற்குழி

## வடக்கு- கிழக்கில்

# தொடரும் யுத்தத்தினால் தென் பகுதியில் 11 ஆயிரத்து 555குடும்பத்தினர்பரிதவிப்பு

(மட்டக்களப்பு)

தொடரும் யுத்தத்தினால் 23 சதவீதமானோர் விதவைகளாக உள்ளதாக சமூக சேவைகள் அமைச்சுவெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பகுதிகளில் மாத்திரம் 18ஆயிரத்து 753 பெண்கள் யுத்தத்தினால் கணவன்மாரை இழந்துள்ளதாகவும் அவர்களில் அதிகமானவர்கள் கிழக்குமாகாணத்தில் வாழ்வதாகவும் தெரிய வருகிறது.

வடக்கு-கிழக்கில் போர் நடவடிக்கையிலீடுபட்டுவரும் படையினரில் 11ஆயிரத்து 555ஆயிரம் குடும்பங்கள் தென்பகுதிகளில் விதவைகளாகவும் உள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

மேற்படிபாதிப்புக்களினால் விதவைகளான பெண்களுக்கு புனர்வாழ்வளிக்க விதவை இல்லங்கள் நிறுவப்பட்டு அதன் மூலம் அவர்களின் நலன்கள் பேணப்படவேண்டுமென பல பொது நல அமைப்புக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(க-60)

# இலங்கைக்கு ஐ.நா.வின் உதவிக்குறைப்பு முன்னுக்குப்பின் முரணான செய்திகள்

(கொழும்பு)

இலங்கைக்கான உதவிகளை ஐக்கிய நாடுகள் சபை குறைப்பது தொடர்பாக வெளிவந்த செய்திகளை ஐக்கியநாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் மறுத்துள்ளது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டப்பிரிவு இலங்கைக்கு வழங்கும் உதவிகளை 50 வீதத்தால் குறைக்கும் தீர்மானத்தினை எடுத்திருப்பதாக ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இவ்வாறான தீர்மானம் எதனையும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டப்பிரிவு எடுக்கவில்லையெனவும் இவ்விவகாரம்பற்றி நியூயோர்க் நகரில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திடம் விசாரித்ததாகவும் வெளிநாட்டமைச்சின் ஐக்கிய நாடுகள் சபை விவகாரம் தொடர்பான உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் உதவிகளைக் குறைக்கப் போவதானதீர்மானங்கள் பற்றி இலங்கை அரசுக்கு இதுவரை அறிவிக்கவில்லை என்று வெளிநாட்டுவளங்கள் திணைக்களப் பணிப்பாளர் ஆ வி. நணயக்காரா தெரிவித்துள்ளார்.

(க-9)

# பாடசாலைகளில் மீன்பிடிப் பாட நெறி போதிக்கப்பட வேண்டியது அவசியம்

## கலாநிதி சூசை தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மீன் பிடிப்பாடத்தை மாணவர்களுக்குக் கற்பிப்பதில் கல்வித் திணைக்களம் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருந்து வருகின்றது முக்கியமாக மரவேலைப் பாடத்துக்கு திணைக்களம் கொடுக்கின்ற முக்கியத்துவத்தைப் போல மீன் பிடிப்பாடத்துக்குக் கொடுக்கப் படவில்லை. இதற்குரிய அடிப்படைக் காரணம் என்னவென்று தெரியவில்லை. மீன் பிடிப்பாடம் ஒரு நிராகரிக்கப் பட்ட பாடமாகப் போய் விட்டது வேதனைக்குரியதாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி. ஏ எஸ். ஆனந்தன் யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குத் தொடரில் இலங்கையில் மீன் வளர்க் கல்வி ஒரு நோக்கு எனும் விடயம் பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

புவியியல் துறையின் விரிவுரை மண்டபத்தில் பேராசிரியர் கே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலாநிதி ஆனந்தன் தொடர்ந்துரையாற்றும் போது எமது நாட்டின் முக்கிய மூலவளமாகிய கடல் வளத்தினை நாம் நல்ல முறையில் திட்டமிட்டு முன்னேற்றுவதற்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விஷேடமாக வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சபை கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகின்றது.

மீன்பிடிப் பாடம் க.பொ.த. (சா )தரம் வரையும் பாடத்திட்டத்தில் உண்டு ஆனால் நடைமுறையில் பாடசாலைகளில் மீனபிடிப் பாடம் படிப்பிக்கப்படுவதில்லை அதற்குரிய ஆசிரிய ஆளணியைத் திரட்டாமல் இருப்பது பெரிய குறையாகவுள்ளது.

மீன்பிடிப் பாடத்தின் முக்கியத்துவத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். ஆதலால் தான் எமது பல்கலைக்கழகத்தில் கடல்வள அபிவிருத்தி நிறுவனம் ஒன்றினை நாம் ஆரம்பித்து அதன் மூலம் மீன் பிடித்துறையில் டிப்ளோமா நெறியை நடாத்திவருகின்றோம்.

இலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைத் தவிர வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் மீன்பிடிப் பாடம் புகட்டப்படுவதில்லை. மேலும் எமது பிரதேசத்தில் அமைதி நிலை ஏற்படும் பட்சத்தில் எமது பல்கலைக் கழகம் முல்லைத் தீவில் மீன் பிடிப் பீடத்தினை அமைக்கவும் எண்ணம் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை நாம் கடல் வளத்துறையை வளர்ச்சியடையச் செய்தல் வேண்டும். அத்துடன் சாத்தியப் படக்கூடிய திட்டங்களை வரைதல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கல்வித்துறையின் விரிவுரையாளர் கே. சின்னத்தம்பி அங்கு உரையாற்றும்போது.

மீன் பிடிக் கல்விக்கான சமூகத்தேவையை நாம் உருவாக்க வேண்டும். அரசாங்கம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதை விடுத்து பிராந்திய தேசிய மற்றும் சர்வதேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கல்விக்கான பங்கினை வளர்க்க வேண்டும். அத்துடன் கல்விக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கூடவே கல்விக்கான தொடர் ஒழுங்கினையும். ஏற்படுத்த வேண்டும் என்றார்.

புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அங்கு கருத்துரை வழங்குகையில் உலக ரீதியில் கடல் வளத்தில் ஒரு சத வீதம் மட்டுமே பயன்படுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# விவசாய நிலத்தில் வழிந்தோடும் நீரில் பசைப்பொருள், கிருமிநாசினி இருக்கும்

து. மகாதேவன்
(பொது சுகாதாரப் பரிசோதகர் யாழ் மாநகரசபை)

(நேற்றைய தொடர்ச்சி)

### சிற்றோடைகள்

பெரும்பாலான சிற்றோடைகள் மழைவீழ்ச்சியின் காரணமாக நிலத்தில் வழிந்தோடும் நீரின் சேர்க்கையாகும், அல்லது நீர்த் தேக்கங்களில் இருந்து வெளியேறும் மேலதிகப் பகுதியாகும், அல்லது பல மூலகங்களிலிருந்து வெளியேறும் நீரின் பகுதியாகும். இச் சிற்றோடைகளிலிருந்து வெளியாகும் நீரின் அளவு காலத்திற்குக் காலம், குறிப்பாக பருவத்திற்கு பருவம் வேறுபடலாம்.

சிற்றோடையில் வரும்நீரின் தன்மை, அந்நீர் வழிந்தோடி வரும் மண்ணோடு சம்பந்தப்பட்ட பல பொருட்களைத் தன்னகத்தேகொண்டிருப்பதனால் நீரில் கலங்கல் தன்மை ஏற்பட வாய்ப்புண்டு. விவசாய நிலங்களால் வழிந்தோடும் நீரில் பசைப்பொருள், கிருமிநாசினி, உக்கிய சேதன அசேதனப்பொருட்கள் யாவும் இருப்பதனால் சிற்றோடைகள் அழுக்கடைந்த நீரையே கொண்டிருக்கும். சனத்தொகை செறிவு அதிகமாக உள்ள இடத்து சிற்றோடைகளில் ஓடிச்செல்லும் நீர் மனிதக்கழிவு, கிருமிநாசினி போன்றவைகளால் அழுக்கடையும்.

நுண்ணங்கி இரசாயனப் பொருட்கள் கரையும் நிலையிலுள்ள தொங்கல் நிலை கொண்டுள்ள நீர் சுகநலப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் நிறமாற்றம், கடினத்தன்மை, கலங்கல்தன்மை, சுவைமாற்றம் போன்றவற்றையும் ஏற்படுத்தும். எனவே சிற்றோடை நீர் மனிதபாவனைக்கு முன்னர் நன்கு சுத்திகரிக்கப்படுதல் மிகவும் அவசியம்.

### வாவி நீரோடை நீர்

இங்கு தரைநீரின் ஒருபகுதி வந்தடைந்து, பின்பு இந்நீர் நீண்டநாட்கள் நிலையாகத் தங்கும். தொங்கல் நிலையில் உள்ள பதார்த்தம் வீழ்படிவு அடைவதனால் நிறமற்றதாகும். பக்ற்ரீறியா அகற்றல் இயற்கையாகவே நடைபெறுவதனால், தரைநீரின் பயன்பாட்டினை விட இயற்கைவாவி, குளத்துநீர் நுகர்வுக்கு பாதுகாப்பானதாகும்.

### செயற்கை நீர்த்தேக்கம்

பெரும்பாலும் ஆறுகளுக்கு குறுக்கே அணைகட்டி செயற்கை முறையில் நீர்த்தேக்கத்தினை ஏற்படுத்துவதை இது குறிக்கும். இந்த நீர்த்தேக்கம் (தேக்கியநீரின்) மேற்பகுதி அல்கா வளர்ச்சிக்கு உகந்தது. நடுப்பகுதி நன்னீராகவும், அடிப்பகுதி காபனீரொட்சைட்டு, இரும்பு, மங்கனீசு சில சந்தர்ப்பங்களில் ஐதரசன்சல்பைட்டு போன்றவற்றையும் கொண்டிருக்கும்.

### தரைக்கீழ் நீர்

தரையை வந்தடையும் நீரின் ஒரு பகுதி நிலத்திலுள்ள நுண்துளையூடாக ஊடுருவி நிலத்தின் கீழ் செல்லும். இவ்வாறு நீர் கீழ்ச் செல்லும் போது அது பல்வேறு பொருட்களைக் கடந்து செல்லவேண்டியதாக உள்ளது. இவற்றுள் சில இயற்கையாக நீரில் கரைந்து செல்லும்சில அசேதனப் பொருட்கள் நீரில் உள்ள ஒட்சிசனை உறிஞ்சி விடுவதனால் நீரில் உள்ள ஒட்சிசன் அகற்றப்படும். ஒட்சிசன் அகற்றப்பட்ட நீரில் காபனீரொட்சைட்டு அதிகம் இருப்பதனால் மண்ணில் உள்ள இரும்பு, மங்கனீசு நீரில் கரையும் போது நிலக்கீழ் நீர் தெளிந்த, குளிரான, நிறமற்ற, கடினநீராக அமைகின்றது.

இந்நீர் குழாய்களில் படிவுகளை ஏற்படுத்தும் கற்பாறைப் பிரதேச நிலக்கீழ் நீர் மென்நீராகவும், கனியுப்புக்கள் குறைந்ததாகவும் உள்ளது. இது நிலநீரை விடக் குறைவான பக்ற்ரீறியாக்களைக் கொண்டிருக்கும் தரையால் உறிஞ்சப்படும் நீர் நிலமேற்பரப்பிலிருந்து 45M அல்லது 1500 அடி ஆழத்திற்கு உறிஞ்சப் படுகின்றது. இத் தன்மை, அந் நிலத்தின்.

நுண்நுளைத்தன்மை—POROSITY

ஊடுருவும் இயல்பு—PERMEABILITY

நீர்த்தாங்குப் படையின் தன்மை— STRATA ஆகிய வற்றில் தங்கியுள்ளது.

### நீரின் உபயோகம்

(1) வீட்டுப் பாவனை
(2) கைத்தொழில்பாவனை
(3) ஏனைய பாவனைகள்

வீட்டுப்பாவனை:- குடிக்க, சமைக்க, கழுவ, குளிக்க, கழிவிடப் பாவனைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்.

கைத்தொழில்பாவனை:- குளிர்படுத்த குளிர்பானம் தயாரிக்க, மது, மதுசாரம் தயாரிக்க, ஐஸ் தயாரிக்க, கடதாசி தயாரிக்க, புடவைக் கைத்தொழில் போன்றவைக்கு உபயோகப்படுத்தப் படும்.

ஏனைய பாவனைகள்;- இயந்திரங்களை குளிர்ப் படுத்த, முலாம்பூச, நீர் அமுக்க இயந்திரங்களைப் பயன்படுத்த, பாதைகளைக் கழுவ. கழிவுப் பொருட்களைஅகற்ற, நீர்ப்பாசனம் செய்ய, பூந்தோட்டம் போன்றவற்றிற்கும் துணை கருவிகளைப் பயன்படுத்தி களிமண்ணை வெளியேற்றுவதற்கும் உபயோகப்படுத் தப்படும்.

### நீர்த்தேவை

ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்குத் தேவையான அளவு:

(1) குடிக்க, சமைக்க:- 1 — 2 கலன்கள்.

(2) வீடுகழுவ, பாத்திரம் கழுவ;- 3 — 5 கலன்கள்.

(3) குளிப்பதற்கு;-10—20 கலன்கள்.

(4) துவைப்பதற்கு:- 5 - 8 கலன்கள்.

(5) கழிவிடத்திற்கு:- 6—8 கலன்கள்.

பொதுவாக ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு நகர்புறங்களில் 40 கலன்கள் (180 லீ.) கிராமப் புறங்களில் 25 கலன்கள் (115 லீ.) தேவைஎனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

### நீர் விநியோகத்திற்கான மூலகங்களை தெரிவு செய்தல்

"நிலத்து இயல்பான நீர் திரிந்து அற்றதாகும் மாந்தர்க்கு இனத்து இயல்பது ஆகும் அறிவு"

-குறள் 452-

மனிதருக்கு அவரவர் சேர்ந்த இனத்தில் வழியே அவரவர் அறிவு மாறுதல் அடைவதை, நிலத்தின் இயல்புக்கேற்ப நீரின் தன்மை மாறுதல் அடைவதுடன் ஒப்பிடுவதைத் (திருவள்ளுவர்) துல்லியமாக கவனித்தல் அவசியம்.

கவனத்தில்கொள்ள வேண்டியவை.

(1) நிலத்தின் புவியியல் அமைப்பு; அதாவது மண்ணின் பாதைகளின் தன்மை.

(2) பயிர்ச்செய்கை அல்லது காடுகளின் இயல்பு.

3) நீர்ப்பாசன வசதி உண்டா இல்லையா என்பது பற்றியது.

[4] குடியிருப்புக்கள், மனிதக்கழிவு அகற்றும் முறை ஆகியவற்றிற்கும் நீர் மூலகத்திற்கும் இடையே உள்ள தொடர்பு.

(5) மனிதக் கழிவால் நீர் மூலம் அழுக்கடையும் வாய்ப்புகள் பற்றியது.

(6) நீர் மூலகத்திற்கு அண்மையில் தொழிற்சாலைகள் இருப்பின், தொழிற்சாலைக் கழிவுகள் அகற்றப்படும் நிலைமை பற்றியது.

(7) எதிர்பார்க்கும் மக்கள் தொகைக்கேற்ப விநியோகிப்பதற்கு போதுமான நீர் உண்டா என்பது பற்றியது.

[8] தேக்கப்பட்ட நீர்மூலமாயின் காற்றின் திசையில் வேகம், நீரின் கலங்கல் தன்மை, அல்கா வளர்ச்சி, நிறம், மணம் பற்றியவை.

நீர் மூலகத்தை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை, செயற்பாட்டு இடவசதி, நீந்துதல், மிருகங்களை குளிப்பாட்டுதல், துணி கழுவுதல் போன்றவற்றை எவ்வாறு மேற்கொள்ளலாம், தேவைபேற்படின் விரிவாக்க வசதிகள் செய்ய முடியுமா, அவசிய மேற்படின் பம்பிகளைப் பொருத்தும்வாய்ப்பு, கட்டட வசதிகள் செய்வதற்கான இடவசதிகள் ஆகியவற்றைக் கணிப்பிட்டுக் கொள்ளல் அவசியம். ★

## இடது மார்பைத் துளைத்த மரக்கட்டையை அகற்றிச் சாதனை

(பெங்களூர்)

இடது மார்பில் இதயத்தின் அருகே ஊடுருவிப் பாய்ந்த 10 அங்குலச் சுற்றளவு M.M நீண்ட மரக் கட்டையை பெங்களூரில் உள்ள செயின்ஜான் மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவர்கள் 6 மணி நேரத்துக்கும் மேலாகப் போராடி அவரின் இடது மார்பிலிருந்து அகற்றி அவரை உயிர்பிழைக்கவைத்து சாதனை படைத்துள்ளனர்.

ஓரூரைச் சேர்ந்த ஆர். சரவணன் (31 வயது) தருமபுரியில் உள்ள தனது மனைவியைப் பார்க்கச் சென்று இரவு பஸ்சில் திரும்பிக் கொண்டிருந்த போது மரக்கட்டை ஏற்றி வந்த லொறியுடன் பஸ் மோதியது. அவரது இடது மார்பைத் துளைத்த மரக் கட்டை முதுகைத் தாண்டி நீண்டிருந்தது.

அவரது இடது நுரையீரலின் மேற்பகுதியும் சில நரம்புகளும் மாத்திரமே சிறிது பாதிக்கப்பட்டிருந்தன நல்லவேளையாக அவரது இதயம், தசைகள் சூழ பாதிப்பு ஏதுமின்றி இருந்தது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். (சி)

## மரத்தாலான சைக்கிள்; கோவை வாலிபரின் புதுமைப் படைப்பு

(சென்னை)

ஏதாவது சாதனை செய்து கின்னஸில் இடம்பெறவேண்டும் என்னும் உந்துதலால் கோவையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், முழுவதும் மரத்தாலான துவிச்சக்கர வண்டி ஒன்றினை மூன்று மாதகாலத்துள் மிகவும் கலைநயத்துடன் அமைத்துள்ளார்.

செந்தில்குமார் என்ற இந்த 23 வயதுடைய இளைஞர் 6 ஆம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்றபோதிலும் மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் திறன் கொண்ட இந்த துவிச்சக்கர வண்டியை அமைத்ததன் மூலம் பலரது பாராட்டுக்கும் உள்ளாகியிருக்கிறார்.

இத்துடன் நின்றுவிடாது பழுதடைந்து நிற்கும் காரை இழுத்துச் செல்லும் திறன் கொண்ட சங்கிலியை மரத்தால் செய்யத்திட்டமிட்டிருப்பதாகவும் அவ்விளைஞர் தெரிவிக்கிறார். (சி-9)

## அவுஸ்திரேலிய விஜயத்தின் போது மகாராணியைக் கொல்ல முயற்சி

### சந்தேகநபர் கைதானார்

(சிட்னி)

அவுஸ்திரேலிய விஜயம் மேற்கொண்டுள்ள எலிஸபெத் மகாராணியைக் கொலைசெய்யத் திட்டமிட்ட நபரை நகரப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எலிஸபெத்மகாராணி நண்பகல் விருந்தொன்றுக்காக சிட்னி மாநாட்டு நிலையத்துக்கு வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் இக்கைது இடம்பெற்றிருக்கிறது.

20 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சிட்னி மாநாட்டு நிலையத் தடைகளை அண்மித்தபோது பொலிஸார் அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து சோதனை நடாத்தினர்.

இச்சோதனையின் போது ஒரு காலில் கத்தி ஒன்று சொருகி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்நபரை அவுஸ்திரேலியப் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் வைத்துள்ளனர்.

எனினும் திட்டமிட்டபடி, எலிஸபெத் மகாராணியின் சிட்னி மாநாட்டு நிலைய விருந்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-9)

## ஒரிஸாவில் கொலையுண்ட அவுஸ். பாதிரியாருக்கு கௌரவ விருது

(சென்னை)

இந்திய மாநிலமான ஒரிஸாவில் படுகொலை செய்யப்பட்ட அவுஸ்திரேலியப் பாதிரியார் திரு. கிரகாம் பெயினுக்கு 'வேல்டுவிசன்' என்ற தொண்டு நிறுவனம் விருது ஒன்றை வழங்கியிருக்கிறது.

நேற்று சென்னையில் நடைபெற்ற நிகழச்சியொன்றில் அவரது மனைவி திருமதி. கிளாடிபெயின் அவ்விருதினைப் பெற்றுக் கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதிரியார் பெயினும் அவரது மகனும் சடந்த ஆண்டு வாகனத்துடன் எரித்துக் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (து-சி)

## ஐரிஷ் குடியரசு இராணுவம் தொடர்பான கருத்துக்கு எதிர்ப்பு

(பெல்பாஸ்ட்)

ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் நிலைப்பாடு தொடர்பாக அலஸ்ட்டா யூனியனிஸ்ட் தலைவர் டேவிட் ட்ரிம்பல் வெளியிட்ட கருத்துக்கு அவரது கட்சிக்குள் கடும் எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் ஆயுதக்களைவு பற்றிய பேச்சுவார்த்தைகள் இன்றியே சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாக டேவிட் ட்ரிம்பல் கூறியிருந்தார்.

இவரது கூற்றுஐரிஷ் பிரதமர் பேர்ட்டி அஹேறன், மற்றும் சமாதான விரும்பிகளிடம் நல் வரவேற்பைப் பெற்ற போதிலும், அவரது கட்சியைச் சேர்ந்தோரிடம் கடும் சினத்தை உண்டுபண்ணியுள்ளதுடன் கட்சி அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்றி தான்தோன்றித்தனமாக எடுத்த முடிவென அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (சி-9)

# விஞ்ஞான வளர்ச்சி எல்லைவரை வாழமாட்டோமா எனும் 'பேராசை

### இன்பம்துய்க்க அல்ல, புதுமைகாண என்கிறார் கலைஞர்

(சென்னை)

சந்திர மண்டலத்துக்குப் போகுமளவு, சந்திரனுக்கு எப்போது குடிபோகலாம் என்ற அளவுக்கு கணனியுகத்தில்விஞ்ஞானஉலகில்வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்னென்னவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொணடிருக்கின்றன. அதுவரை வாழ மாட்டோமா என்ற ஏக்கம் பேராசை ஏற்படுகிறது இன்பத்தைத் துய்ப்பதற்காக அல்ல புதுமைகளைக் காண்பதற்காக.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி திருச்சி பாரதிதாஸன் பல்கலைக்கழகத்தில் நான்கு கோடி ரூபா செலவில் கட்டப்படவுள்ள பொறியியல் தொழில் நுட்பப்பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில் கூறினார்.

சாதி வேரை அகற்றுவதிலும் பாட்டாளிகள் தொழிலாளிகள் ஏழைகளின் கண்ணீரைத்துடைக்கும் பணியிலும். மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டும். என்றும் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டார். (சி)

## சாகஸ நிகழ்ச்சியின் போது விமானம் நொருங்கி விமானி பலி

அமெரிக்காவில் இடம்பெற்ற விமானசாகஸநிகழ்ச்சியொன்றின் போது றொக்கட் விமானம் கீழே வீழ்ந்து நொருங்கியதில் அதன் விமானி பரிதாபமாகப் பலியானார்.

இவ்விமானம், வானில் சுழன்று பறக்க முற்பட்ட வேளையில் கட்டுப்பாட்டை இழந்து தரையில் வேகமாக மோதியதில் தீப்பற்றிக் கொண்டது.

விபத்துக்கான காரணம் பற்றி அமெரிக்க பொலிஸ் பிரிவு தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. (சி-9)

### ஜம்மு காஷ்மீர்-பகுதியில்

# ஆயுததாரிகளின் தாக்குதலில் 36 அப்பாவிகள் துடிதுடித்துப் பலி

(புதுடில்லி)

வட-இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர்பகுதில் நேற்று முன்தினம் இரவு ஆயுதம் தாங்கிய குழுவினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 36 பேர் கொல்லப்பட்டனர்.

ஆனந்தாள் மாவட்டத்தில் உள்ள சேட்டிசின்குரா கிராமத்தில் நடைபெற்ற இத்துயர சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது.

நேற்றுமுன்தினம்இரவு9.30 மணியளவில் சேட்டிசின்குரா கிராமத்திற்குள் புகுந்த சுமார் 50 ற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள், சீக்கிய மதத்தினரை வெளியில் வருமாறு கூச்சலிட்டதுடன், ஆண்களைத் தனியாகப் பிரித்து நிற்கவைத்து கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளியுள்ளனர்.

இந்த மிலேச்சத் தனமான தாக்குதலை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் நேற்று குடியரசுத் தலைவர் மாளிகையில் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜனாதிபதி கிளின்டன் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் இச்சம்பவம் குறித்துக் கவலை தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் ஜோலாகார்ட் நேற்று புதுடில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தக் கொலைச் சம்பவத்தைக் கண்டிப்பதாகவும், இக் கொலையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அமெரிக்க ஜனாதிபதியினதும், மக்களினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (க-5)

## உலக தரிசனம்

## செய்திக் குவியல்

★ தஞ்சாவூரில் நாயக்கர் காலப் பீரங்கி ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ''இராஜகோபால்'' பீரங்கி என்று அழைக்கப்படும் இது 26 அடி நீளமானது கி. பி. 1600 அளவில் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

★ சனகல் நாட்டில் எதிர்பாராதவிதமாக ஜெனரல் அப்துல்டியா தோல்வியடைந்துள்ளார்.

★ பாலஸ்தீனியர்களுக்கு நிலங் கொடுக்க இஸ்ரேல் சம்மதித்துள்ளதாகவும் நீண்ட காலமாக இருந்து வந்த இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

★ சீனாவுடனான பேச்சுவார்த்தைக்கு தான் தயாராக இருப்பதாகத் தாய்வானில் புதிய அதிபர் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

★ அமெரிக்க அதிபரின் வரவைப் பற்றிய அறிக்கையை தாங்கள் வெளியிடப் போவதாக இந்திய கம்யூனிஸ் கட்சி தெரிவித்துள்ளது. (து-சி)

## கிளின்டனின் அழைப்பை ஏற்று வாஜ்பாய் விரைவில் அமெ. விஜயம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஓரிருமாதங்களில் அமெரிக்கா செல்லவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் அழைப்பை ஏற்று அமெரிக்கா செல்லும் அவர், இப்பொழுது நிகழ்ந்து வரும் இந்திய - அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடுகளைத் தவறிய இடத்திலிருந்து பேச்சுக்களைத் தொடருவார் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

தொலைநோக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருநாட்டுத் தலைவர்களும் தொடர்ந்தும் அடிக்கடி பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பில் வெளிநாட்டுக் கொள்கை, சுத்தமான மின்சக்தி உற்பத்தி அணுவாயுதப் பரவல் என்பன பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

22 வருட இடவெளிக்குப் பின் ஏற்பட்ட இச்சந்திப்பில் ஆழமாகவுள்ள முரண்பாடுகளில் இணக்கம் காணப்படவில்லையென்றும் வாஜ்பாயின் அமெரிக்க விஜயத்தின் போது இணக்கங்காணக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருதுவதாகச் செய்திகள் கூறுகின்றன. (து-சி)

## வறியநாடுகளுக்கு இறைச்சி அனுப்பப்படும்

(ரியாத்)

கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்த முஸ்லிம்களின் புனித ஹஜ் கடமையின் போது குர்பானுக்காக அறுக்கப்பட்ட மிருகங்களின் இறைச்சியை வறிய நாடுகளுக்கு அனுப்பிவைக்க சவூதி அரேபியா நடவடிக்கை எடுத்துள்ளது.

ஹஜ் கடமைகளின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் கால்நடைகளை அறுத்துப் பலியிடும் நிகழ்வில் இம்முறை ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற சுமார் 6 இலட்சத்து 37 ஆயிரம் மிருகங்கள் பலியிடப்பட்டமை தெரிந்ததே.

இவற்றின் இறைச்சிகளை இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பதப்படுத்தி, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஜோர்தான், சூடான் உட்பட 27 வறிய முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தமிழ், முஸ்லிம்கள் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சையில் புறக்கணிப்பு'

## மு. கா. எம். பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

''அண்மைக் காலமாக தமிழ், முஸ்லிம் மாணவர்கள் சட்டக் கல்லூரிக்குத் தெரிவாவது குறைந்து வருகிறது. நுழைவுப் பரீட்சையில் மோசடிகள், பாரபட்சம் நிகழ்வதே இந்நிலைக்குக் காரணமாகும். ஆகையால் இப்பரீட்சை குறித்துத் தெரிவிக்கப்படும் புகார்களைத் தடுக்கவேண்டுமானால் அப்பரீட்சை சுதந்திரமான ஒரு கு'ழுவால் நடாத்தப்பட வேண்டும்.''

இவ்வாறு கொழும்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. எம். எம். சுஹைர் தெரிவித்துள்ளார்.

''சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக நடாத்தப்படும் பரீட்சை அந்த நிறுவனத்தால் நேரடியாக நடாத்தப்படுகிறது. அதனால் அதிக மோசடிகள் இடம் பெறுவதாக முறைப்பாடுகள் வருகின்றன.

அத்துடன் குற்றவாளி வெளியே இருக்க அப்பாவி சிறை செல்கின்ற சம்பவங்கள் ஏராளம் உள்ளன. இந்த நிலைமையைத் தடுக்கக் கீழ் நீதிமன்றங்களின் விசாரணைகளைக் கண்காணிக்க ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (சி)

## யாழ். மறைமாவட்ட அமைப்பினரின் யூபிலி ஆண்டு தவக்கால யாத்திரை

(மந்துவில்)

யாழ். மறைமாவட்ட 2000ம் ஆண்டு யூபிலி ஆணைக்குழுவால் யூபிலி ஆண்டின் பரிபூரண பலன்களை பெற்றுக்கொள்ளதவக் கால யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆறு திருத்தலங்களில்ஒழுங்கு செய்யப்படும் தியானவழிபாடுகளில்மக்கள் பங்குபற்றலாம் எனக் கூறப்படுறது.

யாத்திரை தலங்களும் அவை நடைபெறும் காலங்ளும் 26 மார்ச் ஞாயிறு புதுமை மாதா ஆலயம்யாழ்ப்பாணம், 26மார்ச் ஞாயிறு புனித அந்தோனியார் ஆலயம் மானிப்பாய் 1 ஏப்ரல் சனி லூர்த்த மாதா ஆலயம் தும்பளை. 2 ஏப்ரல் ஞாயிறு ஆரோக்கிய மாதா ஆலயம், முகமாலை 8 சாட்டி 9 ஏப்பிரல் ஞாயிறு பற்றிமா மாதா ஆலயம், பண்டத்தரிப்பு.

காலை 9.30 மணிக்கு செபமாலை தியானத்துடன் ஆரம்பமாகி நற்கருணை, எழுந்தேற்றம் ஒப்பரவு வழிபாடு, குணப்படுத்தும் வழிபாடு நற்கருணை ஆசீர் சிலுவைப் பாதை திருப்பலி யூபிலி ஆண்டின் அப்போஸ்தலிக்க ஆசிரோடு நிகழ்வுகள் பி.ப 4.30 மணிக்கு நிறைவுபெறும்.

இக்காலத்தில் உல்லாச களியாட்டங்களைத்தவிர்த்து மனமாற்றம் பெறும் நோக்குடன்செப. தப, தியான பக்தி முயற்சிகளிலே முழுமனத்துடன் ஈடுபடு மாறும் யாத்திரைக்கு முன் திரிதின ஆயத்த வழிபாடுகளில் பங்குபற்றுமாறும் யூபிலி ஆணைக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். (க-39)

## மார்ச்- 31 இல் தந்தை செல்வாவின் 102 ஆவது பிறந்ததின நினைவுகூரல்

தந்தை செல்வா நினைவின் 102 ஆவது பிறந்த தினம் இம்மாதம் 31-ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் எளிமையான முறையில் நினைவ கூரப்படவுள்ளது.

மாவை சேனாதிராஜா எம். பி. தலைமையில் நடைபெற்ற கூட்டணி உறுப்பினர்களின் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அன்றைய தினம் யாழ். கூட்டணி காரியாலயத்தில் உள்ள தந்தை செல்வாவின் படத்துக்கும் முற்றவெளி மைதானத்திலுள்ள அவரது உருவச் சிலைக்கும் நினைவுத் தூபிக்கும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத் தப்படும்.

அடுத்த மாதம் 26-ஆம் திகதி தந்தை செல்வாவின் 23 ஆவதுசிரார்த்த தினம் அனுசரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## அச்சுவேலிப் பொலிஸாரால் புத்தூர் முதியோர் இல்லம் சிரமதான மூலம் துப்பரவு

புத்தூர் முதியோர் இல்ல சுற்றுப்புறப் பகுதி கடந்த 21 ஆம் திகதி அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். ஐ. சிறிசேன தலைமையிலான குழுவினரால் சிரமதான மூலம் துப்புரவு செய்யப் பட்டது.

அனைத்துலக பொலிஸார் தினத்தைக் கொண்டாடும் முகமாக இடம்பெற்ற இச்சிரமதானப் பணி நண்பகல் 12.00 மணிவரையும் இடம் பெற்றது.

சிரமதானத்தைத் தொடர்ந்து அங்குள்ளவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டது. (க-57)

## பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு விசேட பயிற்சி அளிக்க ஏற்பாடு!

நாடு பூராகவும் உள்ள 5000 பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு விசேட பயிற்சி அளிப்பதற்கு மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு 80 இலட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளது.

இதே வேளை மகளிருக்கு சுய தொழில் முயற்சிக் கடன் வழங்கும் வேலைகளுக்கு எட்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (வ)

## வேலணையின் களவு மாட்டிறைச்சி யாழ். கடத்தப்பட்டு விற்பனை

### பிரதேச சபையிடம் புகார்

(வேலணை)

வேலணைப் பகுதியில் களவாக மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு இறைச்சி யாழ்ப்பாணத்திற்குக் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் கட்டாக் காலிகளாகத்திரியும் சிறிய மாட்டுக் கன்றுகளே இவ்விதம் வெட்டப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இச்செயலைத் தடுத்து நிறுத்துமாறு வேலணைப் பிரதேச சபையிடம் எழுத்து மூலம் பல சமூக அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது வேலணைப் பிரதேச சபையால் சட்ட விரோதமானது எனத்தடை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## மரங்களுக்கு பெயர்சூட்டல்

(அரியாலை)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள மரங்களுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது மரங்களின் விஞ்ஞானப் பெயர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் மரங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் பொறிக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புவேலிகளும் அமைக்கப் பட்டுள்ளது. (க)

## கந்தபுராண படனம்

(புலோலி)

பருத்தித்துறை தும்பளை அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த கந்த புராணப் படனம், கடந்த தைமாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வள்ளியம்மன் திருக்கல்யாணமும், 31 ஆம் திகதி அன்னதானமும், ஏப்ரல் 1 ஆம் திகதி வைரவர் மடையும் நடைபெறவுள்ளது. (செ)

## 200 பேர் கைது

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனின் இந்திய வருகையின்போது இலங்கை அரசுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தும்படி கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழீழ ஆதரவாளர்கள் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தும் தமிழீழ விடுதலை ஆதரவு அமைப்புக்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் சு. ப. வீரபாண்டியன் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (வ-ச)

## படையினரின் விசேட அடையாள அட்டை தீவுப்பகுதியில் வழங்கப்படுகிறது

(திருநெல் வேலி)

அல்லைப்பிட்டி மண்கும்பான் பகுதியில் உள்ளவர்களுக்கு ஸ்ரீலங்கா கடற்படையினரால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தீவுப்பகுதி நிரந்தரகுடியிருப்பாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் இவ் அடையாள அட்டையைக் கொண்டு தீவுப்பகுதிக்கு வெளியே இருந்து வரும் நபர்களை அடையாளம் காணும் முகமாகவே மேற்படி அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

இதேவேளை தீவுப்பகுதியில் இதுவரை காலமும் தற்காலிக பாஸ் வழங்கும் நடைமுறையே படையினரால் பின்பற்றப்பட்டது.

தற்பொழுது படையினரின் அடையாள அட்டை வழங்குவது தீவுப்பகுதியில் இதுவே முதல் முறையாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-76)

## அச்சுவேலியில் திருட்டு முயற்சி தோல்வியில் முடிவடைந்தது

(அச்சுவேலி)

அச்சுவேலி மேற்குப்பகுதியில் இடம்பெற்ற திருட்டு முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

சிலதினங்களுக்கு முன் மேற்படி பகுதியில் .திருமதி எஸ். யோசப் என்பவருடைய வீட்டில் நுழைந்த திருடர்கள் கத்தி மற்றும் பயங்கர ஆயுதங்களைக் காட்டி மிரட்டியதாகவும், பிரஸ்தாப்ப் பெண் கூக்குரலிட்டதையடுத்து திருடர்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊரடங்கு நேரத்தில் இத் திருட்டுச்சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (க-57)

## ஜே. வி. பி. வீரவிதானவுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும்

### ஐ.தே-க.எம்.பி கோரிக்கை

''1971, 1989 ம் ஆண்டுகளில் ஏற்பட்ட சூழ் நிலைகள் மீண்டும் நாட்டில் உருவாகும் நிலையுள்ளது. எனவே புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த முயற்சிப்பது போல ஜே.வி.பி.யுடனும் சிங்கள வீரவிதனா உட்பட ஏனைய சகல தரப்பினருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.,,

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சிஎம்.பி.சரத்கோங்காகே தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுக்காணாதன் மூலம் மாத்திரம் பிரபாகரனைச் சுற்றி வளைக்கமுடியாது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். அதேவேளையுத்தமும்வெற்றி பெற வேண்டும். இது நாட்டின் அமைதிக்கு வழிவகுக்கும்.

யுத்தத்தை வெல்லமுடியும். யுத்தத்தை வெல்லமுடியாது என்றுஅமைச்சர்டி.எம்.ஜெயரத்ன கூறுவது படையினரின் மனதை நலிவடையச் செய்யும். என்றும் அவர் கூறியிருக்கிறார். (சி)

## சேவை நீடிப்பில் கிராம உத்தியோகத்தருக்கு பாரபட்சம்

### ஏனிந்த நிலையெனத் துயர்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் பணிபுரியும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படுவது போல 63 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்று வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் கடமை புரியும் கிராம உத்தியோகத்தர்களுக்கு 53 வயதில் ஒய்வு பெற்ற பின்னர் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏனைய அரச உத்தியோகத்தர்கள் 55 வயதுடன் ஓய்வு பெற்றாலும் முன்னர் 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. இப்பொழுது 63 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்படுகிறது. கிராம உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஏனிந்த ஓரவஞ்சனை என இவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

1998 ஆம் ஆண்டு வரை கிராம உத்தியோகத்தர்களுக்கு 55 வயதில் ஓய்வு பெற்ற பின்னரும் 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (சி)

## 'வயக்கரா' வில்லைகள்: இலங்கையில் தடை நீங்குமா?

(கொழும்பு)

உலகம் பூராவும் பாலியல் உறவுக்கு அருமருந்தாகப் பேசப்பட்டுவரும் 'வயக்கரா' வில்லைகளை இலங்கையில் இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு அந்த வில்லைகளைத் தயாரிக்கும் நிறுவனம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தை சுகாதார அமைச்சின் மருத்துவ அதிகாரிகள் அனுமதிப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்படும் இவ் வில்லைகள் ஆசிய அரபு நாடுகள் மற்றும் உலகம்முழுவதும்விற்பனை செய்யப்பட்டுவருகிறது. இலங்கையில் இதன் இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

சுகாதார அமைச்சின் மருத்துவஅறிக்கைகள் யாவும் இவ் வில்லைகள் பயன்படுத்தப் படக்கூடியதே என கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை அதிபர் இ, அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலய அதிபர் இ. சிவபாதசேகரமும் கௌரவ விருந்தினராக தி. சந்திரஹாசனும் சிறப்பு விருந்தினர்களாக ந. சுப்பிரமணியம், இ. சின்னையா, து. தவராசா, த. தங்சராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்களைத் திருமதி சிவபாக்கியம் சிவபாதசேகரம் வழங்கிக் கௌரவிப்பார்.

## பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 22 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 121815 ஏ | 131776 ஏ |
| 131776 பி | 135668 ஏ |
| 135668 பி | 135841 ஏ |
| 135883 ஏ | 138096 ஏ |
| 138096 பி | 138096 சி |
| 138125 ஏ | 138238 ஏ |
| 138247 ஏ | 138260 ஏ |
| 138260 பி | 138263 ஏ |
| 138263 பி | 138263 சி |
| 138331 ஏ | 138331 பி |
| 138331 சி | 138359 ஏ |
| 138392 ஏ | 138393 ஏ |
| 138403 ஏ | 138403 பி |
| 138590 ஏ | 138821 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 136058 ஏ | 136059 ஏ |
| 136060 ஏ | 139855 ஏ |
| 139856 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 136082 ஏ | 136114 ஏ |
| 1361 7 ஏ | 136323 ஏ |
| 136448 ஏ | 136448 பி |
| 136448 சி | 136469 ஏ |
| 136469 பி | 136480 ஏ |
| 136794 ஏ | 139445 ஏ |
| 139454 ஏ | 139454 பி |
| 139472 ஏ | 139472 பி |
| 139472 சி | 139838 ஏ |
| 139841 ஏ | 139841 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 128313 ஏ | 128313 பி |
| 128313 சி | 128341 ஏ |
| 128341 பி | 128341 சி |
| 128344 ஏ | 128351 ஏ |
| 128351 பி | 128360 ஏ |
| 128360 பி | 128360 சி |
| 128360 டி | 136014 ஏ |
| 136047 ஏ | 136074 ஏ |
| 136082 ஏ | 136083 ஏ |
| 136115 ஏ | 136124 ஏ |
| 136128 ஏ | 136133 ஏ |
| 136158 ஏ | 136169 ஏ |
| 136172 ஏ | 136188 ஏ |
| 136732 ஏ | 136732 பி |
| 136732 சி | 136734 ஏ |
| 138319 ஏ | 138319 பி |
| 138319 சி | 138319 டி |
| 138319 ஈ | 138357 ஏ |

| | |
|---|---|
| 139435 ஏ | 139436 ஏ |
| 139436 பி | 139436 சி |
| 139436 டி | 139436 ஈ |
| 139436 எவ் | 139452 ஏ |
| 139452 பி | 139452 சி |
| 139464 ஏ | 139480 ஏ |
| 139840 ஏ | 139929 ஏ |
| 135978 ஏ | 135978 பி |
| 138124 ஏ | 138124 பி |
| 138189 ஏ | 138220 ஏ |
| 138220 பி | 138236 ஏ |
| 138307 ஏ | 138368 ஏ |
| 138420 ஏ | 138438 ஏ |
| 138509 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 136157 ஏ | 125440 ஏ |
| 125440 பி | 131702 ஏ |
| 135541 ஏ | 135698 ஏ |
| 135781 ஏ | 135781 பி |
| 135781 சி | 135781 டி |
| 135791 ஏ | 135937 ஏ |
| 135937 பி | 135937 சி |
| 135976 ஏ | 138141 ஏ |
| 138141 பி | 138156 ஏ |
| 138172 ஏ | 138172 பி |
| 138188 ஏ | 138249 ஏ |
| 138322 ஏ | 138325 ஏ |
| 138371 ஏ | 138374 ஏ |
| 138374 பி | 138382 ஏ |
| 138382 பி | 138388 ஏ |
| 138446 ஏ | 138454 ஏ |
| 138474 ஏ | 138538 ஏ |
| 138844 ஏ | 138954 ஏ |
| 138954 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 138294 ஏ | 139674 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 134267 ஏ | 136129 ஏ |
| 139471 ஏ | 139850 ஏ |
| 139851 ஏ | 139851 பி |
| 125426 ஏ | 125439 ஏ |
| 129500 ஏ | 130764 ஏ |
| 131716 ஏ | 131716 பி |
| 135481 ஏ | 135773 ஏ |
| 135773 பி | 135840 ஏ |
| 135844 ஏ | 135844 பி |
| 135844 சி | 135880 ஏ |
| 135880 பி | 135936 ஏ |
| 135936 பி | 135936 சி |
| 135959 ஏ | 135968 ஏ |
| 135968 பி | 138147 ஏ |
| 138147 பி | 138176 ஏ |
| 138304 ஏ | 138304 பி |
| 138305 ஏ | 138306 ஏ |
| 138306 பி | 138330 ஏ |
| 138345 ஏ | 138367 ஏ |

யாழ். மாவட்ட
சிகை ஒப்பனையாளர் சங்க

### முக்கிய அறிவித்தல்

25-03-2000 சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெற இருக்கும் மாபெரும் சமாதானப் பேரணியில் கலந்து கொள்ளும் பொருட்டு சகல நிலையங்களும் அன்றைய தினம் முடி உறுப்பினர்களை நல்லூர் ஆலய முன்றலில் காலை 9.00 மணிக்கு ஒன்று கூடி கலந்து கொளளுமாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

30, நவீன சந்தை,
மேல் மாடி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்.

தலைவர்
சி. அ. சிவலிங்கம்

செயலாளர்
கி. இரத்தினராசா
(256)

# இலங்கையில் சமாதானம் வேண்டி சனிக்கிழமை சமாதானப் பேரணி

## நல்லூரில் ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

தற்பொழுது இடம்பெறும் யுத்த அவலம்நீங்கி சமாதானம் ஏற்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாபெரும் பேரணிஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறஉள்ளது.

நல்லூர்முற்றலில் காலை 9 மணிக்கு இப்பேரணி ஆரம்பமாகும் எனவும் நீதிசமாதான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இப்பேரணி இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் யாழ்ப்பாணத்தில் இதுவிடயம் சம்பந்தமான சுவரொட்டிகள் பல்வேறு இடங்களும் ஒட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேரணிக்கு நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்திரு ஏ. ஐ. பேர்ணாட் தலைமைதாங்க உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தினத்தில் சகலவர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் மூடி இப்பேரணிக்கு தாங்கள் ஆதரவு வழங்கவேண்டுமெனவும், பெருமளவில் வர்த்தக பெருமக்கள் சலந்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பேரணிக்கு தேசியகலை, இலக்கிய பேரவை தனது ஆதரவை வழங்குவதுடன் எழுத்தாளர்கள் கலைஞர்கள் பெருமளவில் கலந்துகொள்ளுமாறும் தெரிவித்துள்ளது.

25ம் திகதி காலை 9.00 மணிக்கு சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவால் நடாத்தவுள்ள சமாதானத்திற்கான பேரணிக்கு இலங்கை சர்வோதய சிரமதான இயக்கம் தனது பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குகிறது.

இப்பேரணியில் கலந்துகொள்வதற்காக சர்வோதய இயக்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற சகல பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் காலை 8.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். நல்லை ஆதீனத்திற்கு முன்பாக வரும்படி கேட்கப்படுகின்றார்கள். வடகிழக்கு யாழ். மக்களுக்கு சமாதானம் இன்றைய காலகட்டத்தில் தவிர்க்கவோ மறுத்துரைக்கவோ முடியாத ஓர் கட்டாய அம்சமாக உள்ளதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகவே, யாபேரும் ஒன்று திரண்டு. சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்துவோம். என தெரிவித்துள்ளனர்.

### யாழ். வணிகர்சுழக வேண்டுகோள்

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தத்தினாலும், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினாலும் யாழ். வர்த்தக சமூகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனையும், இவ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக சமூகத்திற்கு அரசாங்கமோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களோ எந்த வகையிலும் இதுவரை எதுவித உதவியும் செய்யவில்லை என்பதுடன், இங்கு நடைபெறும் யுத்தத்தின் கொடூரத் தன்மையை தென் மாகாண மக்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தெரியப்படுத்துவது வர்த்தக சமூகத்தின் தார்மீகக் கடமை என்பதால் சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திக்குமான மக்கள் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுஎள சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணிக்கு எமது முழு ஆதரவையும் வழங்க வேண்டுமெனவும், அன்றைய தினம் சனிக்கிழமை சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடி சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணியில் சகல வர்த்தகர்களும் ஒன்றுதிரண்டு பங்குபற்றி எமது ஆதரவை வெளிப்படுத்த வேண்டுமெனவும் யாழ் வர்த்தக சமூகம் தீர்மானித்துள்ளது.

### யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை

வெள்ளிக்கிழமையன்று சகல கோயில்களிலும் நண்பகல் பூசையில் விசேட பிராத்தனைகளை மேற்கொண்டு திருக்கேதீஸ்வரப்பதிகம் திருகோணமலைப்பதிகம் கதிர்காமத் திருப்புகழ் முற்றோதல் மேற்கொள்வதுடன் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் முருகன் கோயில் முன்பாக பேரணியில் கலந்து சொள்ளுமாறு யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் கேட்டுள்ளனர். (க)

### பாடசாலை--

தப்பட்டு வருகின்றது. மீதி 99 சத வீதமும் பயன் படுத்தப்படாமல் உள்ளது. மீன் பிடித்துறையில் கவர்ச்சி இல்லாமல் போய்விட்டது. ஆதலால் நவீன புதிய பெயர்கள் சூட்டப்படல் வேண்டும். குறிப்பாக கடல் அட்டை என்று கூறப்படும் போது அதில் ஒரு வெறுப்பு தானாகவே ஏற்படுகிறது. ஆதலால் கடல் அட்டைக்கு கடல் ரோஜா என்று பெயர் சூட்டினால் கவர்ச்சியாக இருப்பதுடன் தானாகவே ஒரு விருப்பம் ஏற்படும் என்றார்.

பொருளியல் துறைத் தலைவர் வி. பி. சிவநாதன் நன்றியுரை கூறினார். [க-77]

### சான்றிதழ் வழங்கல்

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட தொழிற்திறன் பயிற்சி நெறியில் பயின்று சித்தி எய்திய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என முறைசாராக் கல்விப் பிரிவு செயல்த்திட்ட அலுவலர் எஸ். சிவானந்தம் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்விவலய கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (க-14)

## உடல் உள வளர்ச்சி; ஒழுங்கான உடற்பயிற்சியில் தங்கியுளளது

### உதவிக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

ஒவ்வொரு மனிதனதும் உடல், உள வளர்ச்சியென்பது அவர்கள் அன்றாடம் மேற்கொண்டு வரும் ஒழுங்கான உடற்பயிற்சியில் தான் தங்கியுள்ளது உடல் வலிமை பெறுவதற்கு உணவு எந்த வகையில் பங்காற்றி வருகிறதோ அதே வகையில் உடற்பயிற்சியும், உடல் வளர்ச்சியில் பங்காற்றி வருகின்றது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றியயாழ். கல்விவலய உதவிக் கல்விப் பார் என். வரதராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர் சி. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கலந்து கொண்ட அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்.

மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறுபராயத்திலிருந்தே அக்கறையுடன் செயலாற்றி வரவேண்டும். பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டி வருடத்தில் ஒருமுறை தான் நடைபெறுகிறது. ஆனால் உடற்பயிற்சியுடன் தொடர்புடைய, விளையாட்டுப் பயிற்சி மாணவர்களுக்கு தினமும் அவசியமானது.

இந்தவகையில் மாணவர்களை உற்சாக மூட்டி ஊக்கமளித்து அவர்களை விளையாட்டுத் துறைகளிலும் வல்லவர்களாக்க வேண்டிய கடமை பாடசாலை ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் கைகளில் தான் உள்ளது.

விளையாட்டு என்பது மாணவர்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியாக உள்ள போதிலும் அது கல்வி முயற்சிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தா வண்ணம் மாணவர் சமூகத்தை வழிநடத்திச் செல்வோமானால் எதிர்காலத்தில் நல்ல ஆரோக்கியமான ஓர் இளம் சமுதாயத்தை நமது சமூகத்திலேயே கட்டியெழுப்ப முடியும் என்றார். (க-14)

## (இராசி பலன்)

23.03.2000
வியாழக்கிழமை

(தமிழுக்கு பங்குனி - 10)

திருதியை பகல் 11.28 வரை, சுவாதி இரவு 8.35 வரை, அமிர்தசித்தயோகம், இராகுகாலம் மாலை 2.16 முதல் 3.45 வரை. சுபநேரம் காலை 8.16 முதல் 9.46 வரை,

**மேடம்:**
வெளிவேஷம், கூடிப்பேசல் மன அமைதி.

**இடபம்:**
தொழில் சஞ்சலம், அதிக கற்பனை, கணவர்சினம்.

**மிதுனம்:**
பயந்தநிலை, அதிகாரிகள் கவலை, கடன்சுமை.

**கடகம்:**
தந்திரோபாயம், பெற்றோர் ஆசி, விருந்துண்ணல்

**சிங்கம்:**
தொழில் அதிருப்தி, பழைய கவலைகள், மனைவிசந்தேகம்-

**கன்னி:**
கலைஞர்சந்திப்பு, எதிர்பாரா கௌரவம், மாமனார் உதவி.

**துலாம்:**
பின்னடைவு. தொழில் போட்டி. அகால உணவு.

**விருச்சிகம்:**
அதிகாரம், தெளிவான சிந்தனை, தானதர்ம்ம.

**தனுசு:**
பேச்சிற்குமதிப்பு, தொழில் சிறப்பு, பயணச்செலவு.

**மகரம்:**
கலகப்பேச்சு, காரியக்கேடு மனக்குழப்பம்.

**கும்பம்:**
அற்பர் நேசம், குடும்ப வேற்றுமை தடுமாற்றம்.

**மீனம்:**
பணியாளர்உதவி, தொழில் முதலீடு, அன்னியோன்யம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## விளையாட்டுப் போட்டி

(கல்வியங்காடு)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (செ-54)

> பல் குழுவும் பாழ் செய்யும்
> உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல் குறும்புமில்லது நாடு
> - குறள்

வலம்புரி

## புரிந்துணர்வு

பழம் பெருமை பேசுகின்ற அக்காலத்தில் சமூகங்களுக்கிடையே அந்நியோன்யம் சுடர்விட்டுப் பிரகாசித்து. சுற்றங்களுக்கிடையே அன்பு திளைத்திருந்தது. உலகம் சுருங்கச் சுருங்க அன்பும் அந்நியோன்யமும் அருகிக் கொண்டே போயின.

புரிந்துணர்வு என்பது நமது நாட்டின் அரசியல் அரங்கில் கிலோ என்ன விலை என்று கேட்கத் தோன்றும். இந்த ஒன்று இல்லாதகாரணத்தால் அவலநிலைகள் நாட்டிலே மலிந்தன. மக்கள் உள்ளம் மெலிந்தனர்.

இன்றைக்குப் பேசப்படும் சமாதான முயற்சி முளைகொள்ள வேண்டுமானால் புரிந்துணர்வு என்ற பெறுமதி மிக்க உணர்வு நிலை கொள்ள வேண்டும். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பர். அவ்வாறேபுரிந்துணர்வில்லா வாழ்வு பயனற்றதாகிவிடும். அரசியல் ஸ்த்திரம் புரிந்துணர்வில்லாது கிழட்டாட்டப் ஆடுவது கேலிக்குரியது. அவலமானது; ஆபத்தானதும் கூட.

எந்தக் கோணத்திலிருந்துபார்த்தாலும் தலைமைகள் கூட்டுநிர்வகிப்பு மேன்மையுற புரிந்துணர்வை தமதாக்கிக் கொள்ளவேண்டும். இன்று மக்கள் படும் பீதிவாழ்க்கையில் போர் அனர்த்தம், குண்டுவெடிப்புகள் விலைவாசி ஏற்றம் என்பனவும் சேர்ந்து நெருக்குகின்றன. அர்த்த மற்ற வாழ்வாக காலம்மட்டும் கடந்து செல்கின்றது. இது வாழ்வியலாகா.

ஆரோக்கியமான எதிர்க்கட்சி ஒன்று பாராளுமன்றின் நெறி முறைகளைச் சீர்மைப்படுத்த உதவும். ரணில் தலைமையில் விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றதாகச் செய்தி. பொது மக்களின் வாழ்வியலைச்சிந்திக்காத ஆட்சி மன்று மக்களாட்சி மன்றாகாது மக்களால், மக்களின், மக்களுக்கு என்றுவரைபுசெய்தஆபிரகாம்லிங்கன் நினைவுக்கு வந்து போகின்றார்.

கம்பநாடன்சரி, வள்ளுவப்பெருந்தகை சரிகண்ட நாடு பரிணமிக்க வேண்டுமானால் ஆட்சிபக்குவப் படவேண்டும். புரிந்துணர்வால் ஆகர்சிக்கப்பட வேண்டும். பரஸ்பர நல் நல்லெண்ணம் பரிணமிக்க வேண்டும். தன்னல மற்ற பொதுநலச் சீர்மை முளை விடவேண்டும்.

- ஆசிரியர்

## மக்கள் மாண்பு

(யாழ்ப்பாணம்)



சுண்டுக்குளி ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் கௌரவ அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சரால் அண்மையில் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் கற்கும் காலத்தில் சகல துறை விளையாட்டுக்களிலும் கல்லூரி அணிக்காக விளையாடியுள்ளார். பின் வன பரிபாலன இலாகாவில் கடமையாற்றிய பொழுது அகில இலங்கை வன பரிபாலன உதைபந்தாட்ட அணி, கரப்பந்தாட்ட அணி, துடுப்பாட்ட அணி ஆகியவற்றிலும் அங்கம் வகித்து ஆடியுள்ளார். மேலும் அகில இலங்கை அரசாங்க உதைபந்தாட்ட அணியிலும் இரண்டு வருடங்கள் ஆடியுள்ளார்.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம். ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட முதல்தா போட்டிகளுக்கு நடுவராகக் கடமையாற்றியுள்ளார். அத்துடன் ஈச்சமோட்டை மாதர் முன்னேற்றச்சங்கம், யுத்கிளப் ஆகியவற்றின் போசகராகவும் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம், ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம், சனசமூகநிலையம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் சுண்டுக்குளி நலன் புரிச்சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் யாழ். மாவட்ட பயிற்றுநர் சங்கத்தின் மேலதிக தவிசாளராகவும், யாழ். மாவட்ட கபடி சங்கம் ஸ்போட் கௌன்சில் ஆகியவற்றின் உப தலைவராகவும் கடமையாற்றி வருகிறார். (சி)

# இன்பம், துன்பம் கலந்த நிலையில் மயிலை மாதா கோயிலில் பக்தர்கள்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்திருநாள் அண்மையில் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. இந்த ஆலயத்திற்குச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

யாழ். ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கடந்த 1990ம் ஆண்டு இந்த ஆலயதிருநாள் நடந்த பின்னர் கடந்த வருடம் (1999) மே இந்த ஆலயத் திருநாள் இராணுவத்தினரின் அனுமதியின் பேரில் நடைபெற்றது. மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் தஞ்சமடைந்துள்ள அப்பகுதி மக்கள் பெருந்திரளாக ஆலயத்திருநாள் விழாவிற்கு வந்திருந்தனர். பிரிந்து பல்வேறு இடங்களில் தஞ்சம் புகுந்து வாழ்ந்துவரும் இந்த உறவினர்கள் ஒன்று கூடிமகிழ்ந்து ஆரவாரம் செய்தனர் அதே வேளை அவர்கள் கண்ணீர் மல்க அழுது புலம்பியதையும் காணமுடிந்தது திருநாள் முடிவடைந்ததும்.

இவர்கள் மீண்டும் தாங்கள் தஞ்சமடைந்துள்ள பகுதிகளுக்குச் சென்றனர்.

மயிலிட்டிப் பிள்ளையார் கோவிலுக்கும் சென்றவர்கள் கற்பூரம் கொளுத்தி தேங்காய் அடித்து வணங்கி சென்றதையும் காணமுடிந்தது (சி-52)

## தொலைபேசி உரிமையாளர் கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மேற்படி சங்கத் தலைவர் பி.கந்தையா தலைமையில் இடம் பெற்றஇக்கூட்டத்தில்.

பருத்தித்துறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தினை தரமுயர்த்தல் சம்பந்தமாக தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தினைக் கோருவது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-23)

## பிரயாணப்படி வழங்கல்

(மானிப்பாய்)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இவ்வருடம் முதல் பிரயாணப்படி வழங்குவதற்குத் தேவையான நிதியினை சமுர்த்தி அதிகாரசபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் பிரகாரம் சமுர்த்தி முகாமையாளருக்கு ஐந்நூறு ரூபாவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு இருநூற்று ஐம்பது ரூபாவும் மாதாந்த பிரயாணப்படி வழங்கப்படவுள்ளது. (க-38)

## சாயி அருளமுதம்

### நீர்த் தொட்டி



இறைவன்ஒரு மாபெரும் நீர்த்தொட்டி, உமதுபக்தி என்பது அத்துடன் இணைக்கப்படும்நீர்க்குழாய் (Pipe) உமது செயல்களே திருகுகுழாய்கள் (Taps) அத்தொட்டியை பிரேமை என்ற நீரால் நிரப்பிவை. அப்போது தான் அன்பு வெளிவரும். அங்கு புலன் உணர்வுகளோ, விஷய சுகங்களோ, நிரப்பப்பட்டால், செயல் மூலமாகக் கிடைக்கும் அனுபவமும் அதற்கேற்றதாகும். தொட்டித் தண்ணீர் தூய்தாக இருந்தால் வெளிவரும் தண்ணீரும் தூயதாகும். உணர்வுகள் எவ்வாறு அமைகின்றனவோ அவ்வாறே அனுபவமும் அமைகின்றது. செயல்கள் எவ்வாறே, அவ்வாறே விளைவுகளும் அமைகின்றன. நீ அன்பு நிறைந்து இருந்தால், மகிழ்ச்சியுடனிருப்பாய். கடவுள் உனது மகிழ்ச்சிக்காக காத்திருக்கவில்லை. மகிழ்ச்சியுடன் இருப்பது உனது கடமை, நோக்கம், இலட்சியமாக இருக்க வேண்டும்.

வாழ்க்கை மிக உன்னதமான மதிப்புடையது காலமோ அளவற்றது. இதயமோ மிக்க விசாலமானது. இம்மூன்றின் மகிமையை உணராது குறுகிய பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், புனிதமான பிரேமையுடன் கூடி, இறைவனிடம் சரணாகதி அடையுங்கள். அவரைப் புகலிடமாகக் கொள்ளுங்கள். இதுவே பிரேம தத்துவம்.

பாபா

# பொய்கெட்டு மெய்யானார் மாண்பு

மக்கள் எழுத்தாளர் டானியல் மறைந்து 14 ஆண்டுகள் கழிந்துவிட்டன. 1986 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி தமது 60 ஆவது வயதில் தமிழ் நாட்டின் தஞ்சாவூரில் அவர் காலமானார் அவர் ஆனைக்கோட்டையில் இறெகெறிமயாள் தம்பதிகளுக்குப் புதல்வனாகப் பிறந்தார்.

டானியல் மாக்சியக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதோர் மகத்தான எழுத்தாளர், கம்யூனிஸ இயக்கத்தின் நீண்டகால ஆதரவாளன், தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரில்லாத் தலைவன், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் சஞ்சலங்களையும் வெஞ்சமரையும் சித்திரித்த சிறப்பானதோர் இலக்கியவாதி.

டானியல் களம் பல கண்ட புரட்சிப் போராளி டானியலின் வாழ்க்கை ஒரு போராட்ட வாழ்க்கை, பாட்டாளி வர்க்க இலட்சியத்தின் வெற்றிக்குத் தம்மை அர்ப்பணித்த வாழ்க்கை மக்களின் நல்வாழ்வுக்காக அவர் தன்னையே எரித்துக் கொண்டு அரசியல், சமூக இலக்கியப் பணிகளில் ஈடுபட்டார்.

ஒரு குறிப்பிட்ட காலம் மக்கள் தொண்டில் ஈடுபட்ட பலரை சமூகம் கண்டிருக்கிறது. ஆனால் அறிவு பெற்ற காலம் தொடக்கம் வாழ்க்கையின் இறுதி மூச்சு வரை இலட்சியத்துக்காக வாழ்ந்த சிரிய மனிதர் சிலரே. அவர்களுள் டானியலுமஒருவர் ஆவார். இலக்கியம் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும், இலக்கியம் அரசியலுக்கு- பாட்டாளி வர்க்க அரசியலுக்கு சேவை செய்ய-வேண்டும் டானியல் இந்த வழியில் நெறி பிறளாது நின்று பல சிறுகதைகளையும் நாவல்களையும், நாடகங்களையும் எழுதினார்.



டானியல் கதைகள் உலகங் ஆகிய டானியலின் படைப்புகள் நூலுருப் பெற்றிருக்கின்றன.

ஐம்பதாம் ஆண்டுகளில் சிறுகதைகள் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்து இலக்கிய உலகத்திலும் உருவத்திலும் பாரிய புரட்சியை ஏற்படுத்திய டானியல் தமது இறுதிக் காலத்தில் தமிழில் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவராக வளர்ச்சி பெற்றிருந்தார்.

டானியல் தமது படைப்புகள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் அவல வாழ்வையும் அவர் தம் போராட்டங்களையும் சித்திரித்தார்.

டானியல் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி எழுதியது மட்டுமல்லாமல் மக்களுக்குப் புரியக் கூடிய மொழியிலும் எழுதினார். அவர் சாதாரண மக்களின் பேச்சு மொழியைத் தக்க முறையில் பயன்படுத்தினார்.

எழுத்தாளர் டானியலின் வாழ்க்கை இலட்சியத்துக்கு அர்ப்பணித்த வாழ்க்கை, சொல்லும் செயலும் இணைந்த வாழ்க்கை, மக்கள் சேவையில் திளைத்த வாழ்க்கை.

சமூக உரிமைகளுக்காகப் போராடும் மக்களின் இதயங்களில் அவர் என்றும் வாழ்வார்.

பாரதிநேசன் வீ. சின்னத்தம்பி

கள் வெல்லப்படுகின்றன, பஞ்சமர் (இரண்டு பாகங்கள்) போராளிகள் காத்திருக்கின்றனர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்ச கோணங்கள், தண்ணீர், என் கதை

## தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, மார்ச் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றும் பின்வரும் விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளை ஆதாரங்களுடன் கச்சேரி தாபனக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

1) ஈ. சஜிதா
2) யு. கதிரவேலு
3) ஏ. தயாபரன்
4) ஏ. ஜெரோமி பேட்டில்

## க. பொ. த (உயர்தரம்) பரீட்சை ஜூலையில்

2000 ஆண்டு நடைபெறவுள்ள க. பொ. த. (உ/த) பரீட்சை ஜூலை 31-ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 21-ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்துக்கு அமைய 3 பாடங்களுக்கும் பழைய பாடத்திட்டத்திற்கமைய 4 பாடங்களுக்கும் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

புதிய பாடத்திட்டத்திற்கமைய பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான பொது உளச்சார்பு பரீட்சையும் ஆகஸ்ட்டில் நடைபெறவுள்ளது (க-39)

தமிழ் மக்கள் அனுபவித்து வரும்

# துன்பதுயரங்களை இப்பேரணிமூலம் சர்வதேசத்திற்கு உணர்த்தவேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''வடக்குக் கிழக்கு மற்றும் வன்னிப் பிராந்திய மக்கள் அனுபவித்துவரும் சொல்லொண்ணா துயரங்களை இப்பேரணியின் மூலம் அரசினதும், சர்வதேசத்தினதும் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்''

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த, மகாசிவம் 25ம் திகதி நடைபெறவிருக்கும் சமாதானப் பேரணி தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் த. மகாசிவம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு மூன்றாம்தர மத்தியஸ்த முயற்சியினால் தமிழ் இனத்திற்கு நீதியான, நியாயமான சிந்தனையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்க வழி ஏற்படும் எனவும், குறிப்பாக கல்வித்துறையில் உள்ள இன்றைய நிலையு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும்படி அழுத்தம் கொடுக்கமுடியும்.

கல்வித்துறையின் பல்வேறு கட்ட அபிவிருத்தியில் தென் பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைப் பகிரங்கப்படுத்தமுடியும் என்றும் அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கும் சமாதானப் பேரணியில் யாழ். குடாநாட்டில் உள்ள அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பலாலி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மாணவர்கள், கல்வித்திணைக்கள ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டு எமது பிரச்சினைகளுக்கு சமாதானம் மூலம் தீர்வு ஏற்படவேண்டும் என்று பலமானகுரல் எழுப்பப்படவேண்டும். என தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்டதுணைப் பொதுச் செயலாளர் த. தர்மலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

### நால்வர்.,-

(சின்னராசா அற்புதராசா) மட்டக்களப்பு

★ அன்பரசன் (இராமையா மகேந்திரன்) திருமலை

★ வசந்தன் (கோவிந்தன் சிறிநேசன்) மட்டக்களப்பு

★ கப்டன் அறிவு/அறிவன் (பொன்னம்பலம செல்வகுமார்) திருமலை

### இளஞ்சந்ததி---

அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த நாட்டில் இந்துக்களும் பௌத்தர்களும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்துக்களின் வீடுகளில் புத்தபிரானின் சிலையும், பௌத்தர்களின் வீடுகளில் இந்து தெய்வங்களின் சிலையும் வைத்து பூசிக்கப்பட்டு வருவது இவ்விருமதங்களுக்கிடையேயுள்ள தொடர்பை எடுத்து விளக்குவதாக அமைகின்றது.

கலாசார ரீதியில் இவ்விரு மதத்தினரும் கொண்டுள்ள அந்நியோன்னியமான தொடர்பை ஞாபக மூட்டுவதில் நாம் பெருமை அடைகின்றோம்.

துரதிர்ஷ்டவசமாக தமிழ், சிங்கள அரசியல் வாதிகளால் இவ்விரு பிரிவினருக்குமிடையே ஏற்பட்ட பிரச்சினையை பேசித் தீர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதனால் ஆயுதப்போராட்டம் இடம் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

வாழ வேண்டிய இளைஞர்கள் போரில் மடியவேண்டிய கொடுமையை எமது கண்ணால் பார்க்கவேண்டியுள்ளது.

எத்தனையோ ஆயிரம் பிள்ளைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர், இளம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டு விட்டனர்.

வழிபாட்டுத்தலங்கள் பல அழிக்கப்பட்டதுடன் பூசைகள் இன்றி பூட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

இந்தச் சோதனை மிகுந்த நேரத்தில் இந்து சமயத்தைச் சேர்ந்த நாமும், நீங்களும் மிகுந்த நிதானமாகவும் கண்ணியத்தோடும் செயற்படவேண்டிய பொறுப்புள்ளவர்கள் என்பதை மறந்துவிடாது செயற்படுவது அவசியம் எனவும் கூறப்பட்டுள்ளது. (வ)

### இனப்பிரச்---

அமைச்சர் டிலான் பெரேரா பாராளு மன்றத்தில் பேசும் போது கூறினார்.

அவர்மேலும், பேசுகையில் கூறியதாவது,

கொழும்பில் அல்லது அதன் சுற்றுப் புறத்திலும் குண்டுகள் வெடித்தால், தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படும்போது ''புலிகள்கைது'' செய்யப்படுகிறார்கள் என்று செய்திகளைப் பெரிதுபடுத்தி வெளியிடுவதால் பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்படுகிறது. எனவே இனப்பிரச்சினைக்கு தூபம் இடும்படி எழுதுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (வ)

### நாட்டில்--,

றச்செயல்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும் இவர்கள் கொலை, கொள்ளை நடவடிக்கைகளில் கூடுதலாக ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகையகுற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை பிணையில் விடும் சட்டம் விரைவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது இதற்கான மசோதா ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிணையில் விடும் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டால் கொலை, கொள்ளை. போன்ற கடுமையான குற்றச் செயல்களில் இருந்து குற்றவாளிகள் அவரும் தப்பிக்க முடியர்து என்று அமைச்சர் பீரிஸ் கூறினார்.

இப் பத்திரிகையாளர் மகா நாட்டின் போது சட்டமா அதிபர் கே. சி. கமலசபேசன், சொலிசிஸ்டர் ஜெனரல் சி. ஆர். டி. சில்வா ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர் என்பதுடன்.

வலம்புரிப் பத்திரிகையின் செய்தியாளர் டி. எல். எஸ். பெரேராவும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### ஈ.பி-டி-பி-

ஜெகன்) குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுக்காலை 9-45 மணிக்கு ஆரம்பமான சந்திப்பிற்குத் தமக்கு நண்பகல் 11.15 மணிக்கே இராணுவத் தரப்பால் அழைப்பு விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். எனினும் எமது மக்களின் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எடுத்துக்கூறும் நோக்குடன் உடனடியாகத் தாம் விரைந்து சென்றபோது கூட்டம் நிறைவுறும் தறுவாயில் இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அழைப்பில் காட்டப்பட்ட பாரபட்சம் குறித்து குகேந்திரன் எம்.பி தனது ஆட்சேபத்தினை தூதுவரிடம் நேரில் தெரிவித்ததோடு, தமிழ்மக்கள்படும் சொல்லெணாத் துன்பங்களை ஈ. பி. டி. பி விலாவாரியாக எடுத்துக் கூறிவிடும் என்ற அச்சத்தாலேயே தமக்கு சந்திப்புப் பற்றி முன்கூட்டியே தெரியப்படுத்தவில்லை எனவும் அவர் தூதுவரிடம் எடுத்துக் கூறினார்.

### 27ஆம் திகதி---

செல்ல அனுமதிக்கப்படமாட்டாது இதேவேளை ஏற்கெனவே விமான நிலையத்துக்குள் செல்ல வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள்யாவும் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டிசில்வாவும் விமானப்போக்கு வரத்து அமைச்சின் செயலாளர் டபிள்யு. டி. ஜே. ஜெயரத்தினாவும் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளனர்.

### ரயிலில்---

ளார்.

நேற்று நடைபெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

நீர்கொழும்பிலிருந்து பம்பலப்பிட்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த புகையிரதத்தில் சன நெரிசல் காரணமாக புத்தகப்பையை வைத்துவிட்டு நின்ற மாணவனின் புத்தகப்பையை சோதித்த பெரும்பான்மை இனத்தவர்கள் ''பைக்குள் குண்டா வைத்திருக்கிறாய்'' என்று கேட்டு மாணவனைத் தாக்கிய போது புகையிரதத்தில் பிரயாணம் செய்த பெண்கள் தாக்க வேண்டாமென்று கூறினார்களாம் அதனையும் கேட்காது மாணவன் கடுமையாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மகாலிங்கம் கோபிகிருஷ்ணா என்ற மாணவரே தாக்குதலுக்கு ஆளாகியதாகபம்பலப்பிட்டிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கல்லூரி மாணவர் மன்றம் கண்டித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்கல்

தீவகத்தில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்குநிரந்தரநியமனம் வழங்கியபோதும் எஞ்சியவர்களுக்கான நியமனக் கடிதம்வழங்கல்தொடர்பாக பின்வருபவர்களை இன்று காலை 10மணிக்கு வேலணை உதவி அரச அதிபர் பணிமனைக்கு வருமாறு ஈ.பி.டி.பி. தீவக அமைப்பாளர் மதனராஜா கேட்டுள்ளார்.

ஜெயசோதி கலையரசி(மண்டைதீவு மேற்கு), ஞானப்பிரகாசம் எட்லிசால் (அல்லைப்பிட்டி), குணநாயகம உமாதேவி (மண்கும்பான்), நாகமுத்து சூரியகலா (வேலணை தெற்கு),இரத்தினசபாபதி இரத்தினபாலன் (வேலணை மத்தி), சூரியகுமார் சாரதாதேவி (புங்குடுதீவு) ஆகியோரே உதவி அரச அதிபர் பணிமனைக்கு அழைக்கப்பட்டவர்களாவர்.

# ஜனாதிபதி த.வி. கூட்டணி நேற்று அலரிமாளிகையில் சந்திப்பு

இனப்பிரச்சினை தொடர்பாகவும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை தொடர்பாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்து பேச்சு நடாத்தியது.

நேற்றுப்பிற்பகல் 3மணிக்கு நடக்க இருந்த சந்திப்புக்கு 5 மணித்தியாலம் தாமதமாக ஜனாதிபதி த. வி. கூட்டணி எம். பிக்களைச் சந்தித்தார், 8 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு இரவு 11 மணிவரை நீடித்தது.

இச்சந்திப்பில் 10 ஆயிரம் ஏக்கர், அதியுயர் பாதுகாப்புப் பிரதேசம் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு சுவீகரிக்கப்பட உள்ள 361 ஏக்கர், வலிவடக்கில் இடம் பெயர்ந்துள்ள 20 ஆயிரம் மக்கள் பிரச்சினை, மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் அமுல் நடத்த தடை செய்யப்பட்டுள்ள டே பாத்திட்டம், கல்முனைப் பிரதேச செயலக விஸ்தரிப்பு. திருக் கேதீஸ்வர ஆலயத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றலும் யுத்த சூனிய பிரதேசமாக்கலும், போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன,

இவை தொடர்பாக எழுத்து மூலமான அறிக்கை ஒன்றைத்தருமாறு ஜனாதிபதி கூட்டணி எம். பிக்களிடம் கேட்டுக் கொண்டார்.

இச் சந்திப்பில் கூட்டணி சார்பில் உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி எம், பிக்களான மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம், இரா. சம்பந்தன், பொன். செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### துணைவேந்தர்---

டும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் இவர் தனது பதவிகளை இராஜினாமாச் செய்ததை அடுத்து யாழ் பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை எடுத்த நடவடிக்கையை அடுத்து சிவசூரியா தனது இராஜினாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை நேற்று இது விடயம் தொர்டர்பாக மருத்துவ பீடமாணவர்கள் குழுவாகசென்று துணைவேந்தரை அவரது அலுவலகத்தில் சந்தித்து 4கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட துணைவேந்தர் அவற்றை உடனடியாக நிறைவேற்றத்தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

### சமாதானப்..-

சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு மேற்கண்டவாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அவ் வேண்டுகோளில் மேலும் கேட்கப்பட்டுள்ளதாவது;

25 ஆம் திகதி சனிக்கிழமை அனைத்து வர்த்தகர்களும் தங்களது வர்த்தக நிலையங்களை நண்பகல் வரை பூட்டி ஒத்துழைப்புத் தருமாறும், தனியார் கல்வி நிலையங்களும் தங்களது கல்வி நிலையங்களை மூடி மாணவர்கள் அனைவரையும் சமாதானப் பேரணியில் கலந்து கொள்வதற்கு அவர்களை நல்லூர்க் கந்தசாமி ஆலய முன்றலுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ)

### வவுனியா---

கிரியவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று கொழும்பிலிருந்து தபாலகத்திற்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

தபாலதிபர்களான குகதாஸன், சுப்பிரமணியபிள்ளை ஆகியோரும் காரியாலய உதவியாளர்களான இரவீந்திரன், திருநாவுக்கரசு ஆகியோருமே கைது செய்யப்பட்டவர்களாகும்.

இது தொடர்பாக பிரதம தபாலதிபர் கணபதிப்பிள்ளையையும் வேறு இரு ஊழியர்களையும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்காக கொழும்புக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை வவுனியாவில் நகைக்கடையொன்றில் வேலை செய்யும் பூந்தோட்டவாசியான குமாரசிங்கம் விஸ்ணுகுமார் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச-103)

### அரசும்---

வாழ்வு அளிக்க வேண்டும் என்றும் இனப்பிரச்சினையினால் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வரும் மக்கள் தொழிலற்ற நிலையிலும், தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க முடியாமலும் உள்ளனர்.

இங்குள்ள பாடசாலைகளில் இராணுவம் முகாமிட்டு இருப்பதனால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மீண்டும்பழைய இடத்தில் இயங்கும் மகாஜனாக் கல்லூரியின் அவல நிலை குறித்து மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யாழ்மாவட்ட விவசாயிகளின் விளைபொருட்களை கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய முடியாது விவசாயிதிண்டாடுவதுடன் கடற்றொழிலாளர்களும் தடைச் சட்ட அழுக்கங்களினால் தொழில் வாய்ப்பின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவது பற்றியும் தூதுவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

பிரிட்டிஷ் தூதுவருடனும் அவரது உதவியாளர்களுடனுமான இச்சந்திப்பில் த.வி கூட்டணி, புளொட். ஈ.பி, ஆர். எல்.எவ் உறுப்பினர்களும் இறுதி நேரத்தில் ஈ.பி. டி.பியினரும் கலந்து கொண்டனர்.